4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 170/2020 நாள்: 22.10.2025 வா.சா.1 – பாஸ்கரன்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-

இந்த வழக்கில் பிரதிவாதி என்ன எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். 17.05.2013 அன்று எனது தந்தையார் ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்திருக்கின்ற விவரத்தை பிரதிவாதி அவருடைய எதிர் வழக்குரையில் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தை எனது தந்தை காலமான பிறகு நான் பார்த்துள்ளேன். 14.05.2015 ல் எனது தந்தை காலமானார். இந்த வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் மேற்படி உயில் ஆவணம் பற்றிய விவரம் எனக்கு தெரியும். மேற்படி உயில் ஆவணம் பற்றி நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணம் குறித்து நான் பரிகாரம் எதுவும் வழக்கில் கோரவில்லை என்றால் சரிதான். எனது தந்தை இறந்து 2 ஆண்டுகள் கழித்து எனக்கு மேற்படி உயில் ஆவணம் பற்றிய விவரம் தெரியவந்தது. நான் அசல் உயில் ஆவணத்தை பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் உயில் ஆவணத்தின் நகல் மேற்படி எனது தந்தை எழுதியதாக சொல்லப்படும் அசல் உயில் ஆவணத்தின் புகைப்பட நகல் என்றால் சரிதான். மேற்படி புகைப்பட உயில் ஆவணத்தில் உள்ள கையொப்பம் எனது தந்தையுடையது என்றால் சரிதான். (மேற்படி உயில் ஆவணத்தின் அசலை பிரதிவாதி தரப்பில் பின்னிட்டு தாக்கல் செய்வதாக தெரிவித்தார்.) மேற்படி உயில் ஆவணத்தின் புகைப்பட நகல் பி.சா.ஆ.1 ஆகும். (மேற்படி ஆவணம் வாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) எனது தகப்பனாருக்கு பாகபிரிவினை படி 5 ஏக்கர் 71 சென்ட்

பாத்தியப்பட்டதாகும். மேலும் 1 ஏக்கர் 4 சென்ட் மற்றொரு பாகபிரிவினையில் எனது தந்தைக்கு கிடைத்தது. நான் தாக்கல் செய்துள்ள சிட்டா கூட்டு சிட்டாவாக தான் உள்ளது என்றால் சரிதான், ஆனால் 68 சென்ட் காலை எண்.435/3 உள்ள சொத்து மட்டும் தனிப்பட்ட முறையில் என் பெயரில் சிட்டாவாக உள்ளது. நான் காலை எண்.435/3 க்கான சிட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காலை எண்.435/3 சொத்தானது என் பெயரில் தனிப்பட்ட முறையில் சிட்டாவாக உள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல, அவை என் கைவசம் தற்போதும் உள்ளது என்று கூறுகிறார். வழக்குரை சொத்து விவரத்தில் காலை எண்.435/1 யை மட்டும் தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தை விவசாயத்திற்காக அவர் பெயரில் தனிப்பட்ட முறையில் கடன் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி கடன் தொகையை தன்னுடைய வருமானத்தை வைத்து திரும்ப செலுத்தினார் என்றால் சரியல்ல, நான் தான் செலுத்தினேன் என்று கூறுகிறார். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் எனது தந்தை கடன் வாங்கிய விவரத்தையோ, நான் அதை திரும்ப செலுத்திய விவரத்தையோ சொல்லவில்லை என்றால் சரிதான். 2011 முதல் 2017 ம் ஆண்டு வரை நான் அரியலுரில் பணிபுரிந்து வந்தேன். எனது ஆதார் அட்டை முகவரி நான் குடியிருக்கும் உடுமலைபேட்டை நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் உள்ள முகவரி தான். பிரதிவாதி இந்த வழக்கில் எதிர் கோருரிமை கோரியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 07.01.2025 ல் நான் Reply Statement தாக்கல் செய்துள்ளேன் என்றால் சாட்சி அதை பார்த்தால் தான் என்னால் சொல்லமுடியும் என்று கூறுகிறார். உயில் ஆவணம் பற்றி தெரிய வந்தவுடன் நான் உடனடியான நடவடிக்கை எடுத்தேன், வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பினேன். வழக்கறிஞர் நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிட்டார். மேற்படி விவரத்தை என்னுடைய வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி உயில் பற்றிய விவரம் தெரிய வந்த தேதியில் எவ்வளவு சொத்தை

எனது தந்தையார் சகோதரிக்கு எழுதி வைத்தார் என்ற விவரம் எனக்கு தெரியும். உயிலில் உள்ள கையொப்பம் செல்லாது என்று நான் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான், ஏனென்றால் அது பற்றிய விவரம் எனக்கு இல்லை. நான் தாக்கல் செய்துள்ள எதிர் கோரிக்கைக்கு பதில் கோரிக்கை நான் சொல்லி தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதி எதிர் கோரிக்கையில் என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால் மீதமுள்ள 3 ஏக்கர் 85 சென்ட்டில் பாதி பாகம் வேண்டும் என்று கோரியுள்ளார். எனது தந்தைக்கு 12.04.2012 ல் விபத்து ஏற்பட்டது. எனது தந்தை மேற்படி காலகட்டத்திற்கு பிறகு சிகிச்சையில் இருந்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு விபத்து ஏற்பட்ட போது தொடர் சிசிச்சைக்கு நான் உடனில்லாமல் வெளியூரில் இருந்தேன் என்றால் சரியல்ல. 01.05.2012 வரை எனது தந்தைக்கு நான் சிகிச்சைக்காக உடனிருந்தேன், அதன்பிறகு எனது மகன், மனைவி உடனிருந்து கவனித்து வந்தார்கள். 17.05.2013 ல் எனது தந்தையுடன் எனது குடும்பத்தார் உடனிருந்தார்களா என்று எனக்கு தெரியாது. உயில் ஆவணத்தில் யார் யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள், உடனிருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சாட்சி உயிலை படித்து பார்த்தேன், யார் யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள், யார் யார் உடனிருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதி எதிர் வழக்குரையில் யார் யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள், யார் யார் உடனிருந்தார்கள் என்ற விவரத்தை சொல்லியுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி உயில் ஆவணத்தில் யார் யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்ற விவரம் தற்போது தெரியுமா என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். நான் உயிலில் சாட்சி கையொப்பம் போட்டவர்களை நேரடியாக விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. எனது தந்தைக்கு கிடைத்த சொத்துக்கள் குடும்ப பாகபிரிவினையில்கிடைத்த சொத்துக்கள் என்றால் சரிதான். எனது தந்தைக்கு 1984 ல் பாகபிரிவினையில் சொத்து கிடைக்கும்

போது எனக்கு வயது சுமார் 16 இருக்கும். மேற்படி பாகபிரிவினை ஏற்படும் சமயத்தில் பிரதிவாதி பிறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி 1984 ல் நடைபெற்ற பாகபிரிவினை பத்திரத்தில் நானும், எனது சகோதரியும் தரப்பினர்கள் என்றால் சரிதான். மேற்படி பாகபிரிவினை பத்திரத்தை நான் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி பாகபிரிவினை பத்திரத்தில் எனது தந்தைக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் அவருடைய தனிப்பட்ட சுயார்ஜித சொத்துக்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் ⅔ பாகத்தை பிரதிவாதி தனியாக சுவாதினத்தில் வைத்து விவசாயம் செய்து அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். ⅓ பாகத்தை பிரதிவாதி விவசாயம் செய்யாமல் தனிபட்ட முறையில் எனக்கு விட்டுள்ளார் என்றால் சரிதான். 2015 ம் ஆண்டு முதல் மேற்படி ⅓ பாகத்தை விவசாயம் செய்யாமல் பிரதிவாதி விட்டுள்ளார் என்றால் சரிதான். 2015 ம் ஆண்டு முதல் ⅔ பாகத்தை பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தில் எனது தந்தையார் செக்குபந்தி கண்டுதான் உயில் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல, பொதுவில் எழுதப்பட்டுள்ளதாக சாட்சி கூறுகிறார். 1984 பாகபிரிவினை பத்திரத்தில் கண்டுள்ள படி தனிப்பட்ட முறையில் எனது தகப்பனாருக்கு கிடைத்த சொத்துக்கள் என்றால் சரியல்ல. 1984 பாகபிரிவினை பத்திரத்தை நான் படித்து பார்க்கவில்லை. மேற்படி 1984 பாகபிரிவினை பத்திரத்தில் அதனுடைய மூல ஆவணம் பற்றி சொல்லப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1984 ல் பாகபிரிவினையில் கிடைக்கப்பெற்ற சொத்து எனது தந்தையாரின் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக எனது சகோதரி பிரதிவாதி காவல் நிலையத்தில் என் மீது புகார் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி புகாரில் ⅔ பாகத்தை அவர் வைத்துக்கொள்வதாகவும், ⅓ பாகத்தை எனக்கு ஒதுக்குவதாகவும் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி ⅓ பாகம் தரிசாக உள்ளது, யாரும் விவசாம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எதனடிப்படையில் தாவா சொத்து கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாக

கூறுகிறேன் என்றால் சாட்சி கூட்டு சுவாதீனத்தில் உள்ளதாக நான் சொல்லவே இல்லை என்று கூறுகிறார். தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரிதான், சாட்சி தற்போது சுவாதீனத்தில் இருப்பதாக கூறுகிறார். எனது தந்தைக்கு பாகபிரிவினை மூலம் 1984 கிடைக்கப்பெற்ற சொத்தை பொறுத்து அவர் யாருக்கு வேண்டுமானாலும் உரிமையுண்டு என்றால் சரியல்ல. தாவா சொத்து கோமங்கலம் சார் பதிவாளர் அலுவலக எல்கைக்கு உட்பட்டதாகும். எனது தகப்பனார் எழுதி வைத்ததாக சொல்லப்படும் உயில் ஆவணம் உடுமலைபேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. கோமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் செல்லாது என்பதால் தான் உடுமலைபேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்று சாட்சி கூறுகிறார். 2015 ம் ஆண்டு உயில் ஆவணம் எந்த சார் பதிவாளர் அலுவலகத்திலும் பதிவு செய்யலாம் என்ற நடைமுறை இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனாரின் விபத்திற்கு இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இழப்பீட்டு மனுவை எனது தந்தையார் தான் தனிப்பட்ட முறையில் நேரடியாக நடத்தினார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எனது தந்தையார் நேரடியாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் உள்ள இழப்பீட்டு தொகை எனது தந்தை காசோலையாக பெற்றுள்ளார் என்றால் சரிதான். வங்கி பரிவர்த்தனையை மேற்படி வழக்கில் எனது தந்தையார் நேரயாக செய்தார் என்றால் சரியல்ல, என்னுடைய உதவியால் செய்தார் என்று சாட்சி கூறுகிறார். கையெழுத்து போட சொன்னால் எனது தந்தை கையொப்பம் போடுவார். வங்கி பரிவர்த்தனைக்காக நான் மேற்படி வழக்கில் உதவி செய்தேன் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தையார் எழுதி வைத்த உயில் ஆவணப்படி பிரதிவாதி ⅓ பாகம் பாத்தியம் என்றால் சரியல்ல. மீதமுள்ள எனது தகப்பனாருக்கு பாகத்தில் கிடைத்த சொத்தில் ½ பாகம் பிரதிவாதிக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. ⅔ பாகம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட

முறையில் தாவா சொத்தில் பாத்தியம் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட ⅔ பாகத்தில் பிரதிவாதி தென்னை பயிர் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. மீதமுள்ள ⅓ பாகத்தை மட்டும் எனக்கு பாத்தியம் என்பதால் அதை விவசாயம் செய்யாமல் பிரதிவாதி விட்டு வைத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் பாகம் கோருவதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும், பிரதிவாதி கோரியுள்ள எதிர் கோரிக்கை அனுமதிக்கதக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.10.22 17:29:26 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.